www.Padasalai.Net www.CBSEtips.in

FTM

# முதல் பருவ தொகுத்தறித் தேர்வு - 2023

7 - ஆம் வகுப்பு மதுரை **தமிழ்** 19.09.23

காலம் : 2.00 மணி மதிப்பெண்கள் : 60

**I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 4 X 1 = 4

1. 'நெறி' என்னும் சொல்லின் பொருள் ............... .

அ) வழி ஆ) குறிக்கோள் இ) கொள்கை ஈ) அறம்

2. மொழியின் முதல்நிலை பேசுதல் .............. ஆகியனவாகும்.

அ) படித்தல் ஆ) கேட்டல் இ) எழுதுதல் ஈ) வரைதல்

3. 'நேற்று + இரவு' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ............ .

அ) நேற்று இரவு ஆ) நேற்றிரவு இ) நேற்றுரவு ஈ) நேற் இரவு

4. தேசியம் காத்த செம்மல் எனப் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரைப் பாராட்டியவர் ........... .

அ) இராஜாஜி ஆ) பெரியார் இ) திரு.வி.க. ஈ) நேதாஜி

**II கோடிட்ட இடங்களை நிறைவு செய்க.** 4 X 1 = 4

1. 'காட்டின் வளத்தைக் குறிக்கும் குறியீடு' என்று அழைக்கப்படும் விலங்கு ........................ .
2. நாவற்பழத்திற்கு உவமையாகக் கூறப்படுவது ........... .
3. முகில் - என்ற சொல்லின் பொருள் .......... .
4. பாஞ்சாலங் குறிச்சியில் ............. நாயை விரட்டி விடும்.

**III பொருத்துக.** 4 X 1 = 4

| | | |
|---|---|---|
| 1. பொக்கிஷம் | - | அழகு |
| 2. சாஸ்தி | - | செல்வம் |
| 3. விஸ்தாரம் | - | பகுதி |
| 4. சிங்காரம் | - | பெரும்பரப்பு |

Greentamil.in
97861 41410

**IV அ) எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 5X2=10

1. 'ஒன்றல்ல - இரண்டல்ல' - பாடலில் இடம்பெற்றுள்ள வள்ளல்கள் குறித்த செய்திகளை எழுதுக.
2. மொழியின் இருவடிவங்கள் யாவை?
3. கரடி 'அனைத்துண்ணி' என அழைக்கப்படுவது ஏன்?
4. பாஞ்சாலங்குறிச்சியின் இயற்கை வளம் எத்தகையது?



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

5. எப்போது தன் நெஞ்சே தன்னை வருத்தும்?
6. முத்துராமலிங்கத் தேவரைப் பாராட்டிப் பெரியார் கூறியது யாது?
7. குற்றியலிகரம் என்றால் என்ன?

**ஆ) எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 4X3 = 12

1. 'எங்கள் தமிழ்' பாடலில் நாமக்கல் கவிஞர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
2. கிளை மொழிகள் எவ்வாறு உருவாகின்றன?
3. காடுகளை அழிப்பதால் ஏற்படும் விளைவுகளை பட்டியலிடுக.
4. தாய் தன் வயிற்றைப் புலி தங்கிச் சென்ற குகையோடு ஒப்பிடுவது ஏன்?
5. பாஞ்சாலங்குறிச்சியின் வீரத்துக்குச் சான்றாகும் நிகழ்வுகள் பற்றி எழுதுக.
6. வழக்கு என்றால் என்ன?

**V அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 5 X 2 = 10

1. **கலைச் சொல் எழுதுக.** அ) Slogan ஆ) Island
2. **கீழ்க்காணும் சொற்களை உயர்திணை, அஃறிணை என வகைப்படுத்துக.**
   தலைவி, கடல், ஆசிரியர், புத்தகம்.
3. **தொகைச் சொற்களை விரித்து எழுதுக.**
   அ) முக்கனி ஆ) நாற்றிசை

Greentamil.in

4. **இடைச்சொல் 'கு' சேர்த்துத் தொடரை எழுதுக.**
   அ) பாட்டு பொருள் எழுதுக. ஆ) முல்லை தேர் தந்தார் பாரி.
5. **கோடிட்ட இடங்களைத் தமிழ் எண் கொண்டு நிரப்புக.**
   அ) எனது வயது ..................... . ஆ) நான் படிக்கும் வகுப்பு ................. .

**VI பின்வரும் பாடல்களை அடிபிறழாமல் எழுதுக.** 4 + 2 = 6

1. பச்சை மயில் நடிக்கும் ............ எனத் தொடங்கும் 'காடு' - பாடல்.
2. இயற்றலும் ................... எனத் தொடங்கும் குறள்.

**VII விடையளிக்க.** 2 X 5 = 10

1. ஜாதவ்பயேங் - காட்டை எவ்வாறு உருவாக்கினார்? ***(அல்லது)***
   வ.உ.சிதம்பரனாரின் உரையை வாழ்க்கை வரலாறாகச் சுருக்கி எழுதுக.
2. நீங்கள் சென்று வந்த சுற்றுலா குறித்து உங்கள் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.
   ***(அல்லது)*** 'நான் விரும்பும் தலைவர்' - என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net